# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.6/2016
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : Tmt.Chellammal |
| Husband's Name | : முனுசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2021.

**முதல் விசாரணை -**

நான் திருமுல்லைவாயிலில் வசித்து வருகிறேன். அசா 3 ஆறுமுகம் என்னுடைய உறவினர் ஆவார். என்னை பெரியம்மா என்று அழைப்பார். அசா 3 ஆறுமுகம் மயிலாப்பூரில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வந்தார். அசா 3 ஆறுமுகம் பெயரில் சிங்கபெருமாள் கோயிலில் அவருக்கு சொந்தமாக இடம் இருந்தது. அந்த இடத்தை விற்றுக் கொடுப்பதற்காக என்னுடைய அண்ணன் மகன் முருகேசனிடம் சொன்னேன். எதிரி முருகேசன் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். முருகேசனிடம் சிங்கபெருமாள் கோயிலில் உள்ள ஆறுமுகத்தின் சொத்து பத்திரத்தை கொடுத்தேன். முருகேசன் விற்றுக் கொடுப்பதாக சொல்லி பார்க்கலாம் பார்க்கலாம் என்று சொல்லி வந்தார். அதன்பிறகு முருகேசன் அந்த இடத்தை வேறொரு நபருக்கு விற்று விட்டதாக நான் கேள்விப்பட்டேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை –** எ2 முதல் எ5 வரையிலான எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.6/2016**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : Thiru.Rajesh Surana |
| Father's Name | : தேஜ்மல் சுரானா |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2021.

**முதல் விசாரணை -**

நான் மயிலாப்பூரில் உள்ள கச்சேரி ரோட்டில் வசித்து வருகிறேன். எனக்குச் சொந்தமாக இன்ஸ்டென்ட் டீ தயாரிக்கும் தொழிற்சாலை திருவள்ளூரில் உள்ளது. அசா 3 ஆறுமுகம் எங்களுக்குச் சொந்தமான இடத்தில் யோகம் பெட்டிங் என்ற கடையை 80 களில் நடத்தி வந்தார். கடந்த 1991 ஆம் வருடம் அசா 3 ஆறுமுகம் எங்கள் இடத்தைக் காலி செய்து விட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். வழக்கு பற்றி மற்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது.

**குறுக்கு விசாரணை -** எ2 முதல் எ5 வரையிலான எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.